# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,
சென்னை- 600 032.

முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

**முறையீட்டு மனு எண். 15/ந/2018**

**ஆணை எண். 18/2018**

**நாள் : 02/02/2018**

**ஓய்வு பெற்ற மேட்டூர் நகராட்சி**
**பணியாளர்கள் மற்றும் பணியாளர்களின்**
**வாரிசுதாரர்கள், – முறையீட்டு மனுதாரர்கள்**
**மேட்டூர்.**

**நகராட்சி ஆணையர்,**
**மேட்டூர் நகராட்சி,**
**சேலம். – எதிர் மனுதாரர்**

சேலம் மாவட்டம், மேட்டூர் நகராட்சியில் பணியாற்றி ஓய்வு பெற்ற பணியாளர்கள் மற்றும் பணி ஓய்விற்கு பின் காலமான பணியாளர்களின் வாரிசுதாரர்கள் ஆகியோர்களிடமிருந்து பெறப்பட்ட பதினைந்து முறையீட்டு மனுக்கள் இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 15/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரர்களின் மனுக்கள் பரிசீலிக்கப்பட்டு, கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

சேலம் மாவட்டம், மேட்டூர் நகராட்சியில் பணியாற்றி ஓய்வு பெற்ற பணியாளர்கள் மற்றும் பணி ஓய்விற்கு பின் காலமான பணியாளர்களின் வாரிசுதாரர்கள் ஆகியோர்களிடமிருந்து பெறப்பட்ட பதினைந்து முறையீட்டு மனுதாரர்களின் பெயர் பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள ஓய்வு பெற்ற / காலமான நகராட்சிப் பணியாளர்கள் மேட்டூர் நகராட்சியில் பணியாற்றிய காலத்தில் அவர்களின் ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்பட்ட சேமநலநிதிக்கான வட்டித் தொகையைக் கணக்கிட்டு வழங்க ஆணையிடக் கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளனர்.

2. 2014–ஆம் ஆண்டு தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டப் பிரிவு 7 (1 )–ன் கீழ் பொதுப்பணியாளர் அல்லது உள்ளாட்சி அமைப்பொன்று ஊழல் அல்லது சீர்கேடான நிர்வாகத்தில் ஈடுபட்டுள்ளது என இம்முறைமன்ற நடுவரிடம் வந்திருக்கின்ற எழுத்துவடிவிலான முறையீட்டு மனுவினை மட்டுமே இம்முறைமன்ற நடுவத்தால் விசாரிக்க இயலும். சேமநலநிதிக்கான வட்டித் தொகையை வழங்கக் கோரி சமர்ப்பிக்கப்பட்ட முறையீட்டு மனுக்கள் அனைத்தும் மேட்டூர் நகராட்சியின் நடவடிக்கைக்கே உட்பட்டது. மனுதாரர்களின் முறையீடு சம்பந்தமாக நகராட்சிக்கு முறையாக சமர்ப்பிக்கப்பட்ட மனுக்கள் பரிசீலிக்கப்படாமல் இருந்தாலோ அல்லது நகராட்சி அலுவலர்கள் வேண்டுமென்றே காலந்தாழ்த்துதல் மற்றும் கையூட்டு கோருதல் போன்ற சீர்கெட்ட நடவடிக்கையில் ஈடுபட்டால் மட்டுமே முறையாக உரிய ஆவணங்கள் மற்றும் சாட்சிகளுடன் இம்முறைமன்ற நடுவத்திற்கு முறையீடு செய்ய வேண்டும்.

3. சேமநலநிதிக்கான வட்டித் தொகையை வழங்கக் கோரி, இந்நேர்வு சம்பந்தப்பட்ட மனுதாரர்கள் தங்களது கோரிக்கை சம்பந்தமாக நகராட்சிக்கு உரிய முறையில் விண்ணப்பித்துள்ளனரா எனத் தெரியவில்லை. பெறப்பட்ட மனுக்கள் அனைத்தும் ஒரு சில நபராலேயே ஒரே மாதிரியான படிவத்தை ஒளிநகல் எடுத்து அதில் பெயர், விலாசம், பதவி (ம) இறந்த தேதி, ஓய்வு பெற்ற தேதி ஆகியவைகளை மட்டும் பூர்த்தி செய்து தனித் தனி விண்ணப்பங்களாக எழுதப்பட்டுள்ளன. எனவே, மனுக்கள் எழுதித் தரும் நபர்கள் பணப்பலன் பெற்றுக்கொண்டே இதுபோன்ற செயல்களில் ஈடுபடுவதுடன் ஓய்வு பெற்ற அடிப்படை பணியாளர்களை தவறான முறையில் வழிநடத்துவதாகவும் இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது. மேலும், மேட்டூர் அணையில் செயல்பட்டு வரும் மேட்டூர் நகராட்சி ஓய்வூதியர்கள் நல கிளைச் சங்கப் பொறுப்பாளர்களும் ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு உரிய வழிகாட்டுதல்களை தெரிவிப்பதில்லை. மாறாக அலுவலர்களின் கோரிக்கை குறித்து உரிய அலுவலர்களுக்கு முறையீடு செய்யாமல், ஆரம்பநிலையிலேயே இம்முறைமன்ற நடுவத்திற்கு முறையீடு செய்யும்படி அறிவுறுத்தவும் செய்கின்றனர். மேற்படி சங்கப் பொறுப்பாளர்களிடமிருந்து பரிந்துரை கடிதங்களும் வரப்பெறுகின்றன. இதுபோன்ற செயல்களை மேற்குறிப்பிட்ட சங்கப் பொறுப்பாளர்கள் தவிர்க்க வேண்டும் என இம்முறைமன்ற நடும் அறிவுறுத்துகிறது. இம்முறைமன்ற நடுவத்திற்கு தாக்கல் செய்யப்படும் மனுக்கள் மேற்குறிப்பிட்ட சட்டபிரிவிற்குட்பட்டும், 2015–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் (முறையீடுகள் தாக்கல், விசாரணை மற்றும் தீர்வு செய்யப்படுதல் முறைகள்) விதிகளில் குறிப்பிட்டுள்ளபடி உரிய கட்டணத்துடன் இம்முறைமன்ற நடுவத்திற்கு முறையீட்டு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டால் மட்டுமே அம்மனுக்களை இம்முறைமன்ற நடுவத்தால் பரிசீலிக்க இயலும். எனவே, பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள ஓய்வு பெற்ற / காலஞ்சென்ற பணியாளர்களின் சேமநலநிதிக்கான வட்டி மற்றும் ஒய்வூதிய பலன்கள் வழங்குவதற்கான மனுக்கள் உரிய முறையில் தாக்கல் செய்யப்பட்டிருப்பின் விதிகளின் படி அவற்றினை பரிசீலித்து விரைவான நடவடிக்கையை மேற்கொள்ளும்படி மேட்டூர் நகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2018–ஆம் ஆண்டு, பிப்ரவரி திங்கள், 2–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. நகராட்சி ஆணையர்,
மேட்டூர் நகராட்சி,
சேலம்(இணைப்புடன்).

2. செயலாளர்,
மேட்டூர் நகராட்சி ஓய்வூதியர்கள் நல கிளைச் சங்கம்,
மேட்டூர் அணை – 636 401.

3. செயலாளர்,
தமிழ்நாடு மாநகராட்சி மற்றும் நகராட்சி ஓய்வூதியர்கள் சங்கம்,
வரதப்பன் தெரு,
கோட்டை, சேலம் – 636 001.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி

## பட்டியல்

| வ. எண். | ஓய்வுபெற்ற நகராட்சிப் பணியாளரின் பெயர் மற்றும் முகவரி | பதவி | ஓய்வு பெற்ற மற்றும் காலமான நாள் | முறையீட்டின் தன்மை |
|---|---|---|---|---|
| 1. | செம்பாயி,<br>எண்.34/A4, காந்தி நகர்,<br>மேட்டூர். | துப்புரவுப் பணியாளர் | 30.06.2006 | சேமநலநிதிக்கான வட்டித் தொகை வழங்குதல் |
| 2. | E. கோவிந்தன்,<br>எண்.30/34/A67,<br>குள்ளவீரம்பட்டி, மேட்டூர். | துப்புரவுப் பணியாளர் | 30.06.2015 | சேமநலநிதிக்கான வட்டித் தொகை வழங்குதல் |
| 3. | சுந்தரி (மனுதாரர்),<br>சாமிக்கண்ணு (காலமான பணியாளர்),<br>எண்.E (40). கூலி லைன்,<br>மேட்டூர். | துப்புரவுப் பணியாளர் | 31.10.1995<br>(காலமான தேதி) | சேமநலநிதிக்கான வட்டித் தொகை வழங்குதல் |
| 4. | பாப்பாத்தி(மனுதாரர்),<br>சிவா (காலமான பணியாளர்)<br>எண்.E (48). கூலி லைன்,<br>மேட்டூர். | துப்புரவுப் பணியாளர் | 02.07.2001<br>(காலமான தேதி) | சேமநலநிதிக்கான வட்டித் தொகை வழங்குதல் |
| 5. | R. கலாவதி(மனுதாரர்),<br>இரத்தினவேல் (காலமான பணியாளர்)<br>நாட்டா மங்கலம், மேட்டூர். | மேஸ்திரி | 06.09.2012<br>(காலமான தேதி) | சேமநலநிதிக்கான வட்டித் தொகை வழங்குதல் |
| 6. | ஈஸ்வரி(மனுதாரர்),<br>மாரீஸ்வரன் (காலமான பணியாளர்)<br>H பிளாக், எண்.37,<br>கூலி லைன், மேட்டூர். | மின் பணியாளர் | 29.06.2015<br>(காலமான தேதி) | சேமநலநிதிக்கான வட்டித் தொகை வழங்குதல் |
| 7. | கமலா(மனுதாரர்),<br>ஆறுமுகம் (காலமான பணியாளர்)<br>98/59A, மீன்காரர் தெரு,<br>காவேரிபாலம் மேட்டூர். | துப்புரவுப் பணியாளர் | (காலமான தேதி)<br>குறிப்பிடவில்லை | சேமநலநிதிக்கான வட்டித் தொகை வழங்குதல் |
| 8. | S.M.நடராஜன்,<br>எண்.59, PWD கோர்ட்ரஸ்,<br>மேட்டூர். | வருவாய் உதவியாளர் | 31.12.1987 | சேமநலநிதிக்கான வட்டித் தொகை வழங்குதல் |
| 9. | P.K. கந்தசாமி,<br>எண்:2/51, தாளக்காரன்பட்டி,<br>சேலம் மாவட்டம், மேட்டூர். | அலுவலக உதவியாளர் | 30.04.1997 | சேமநலநிதிக்கான வட்டித் தொகை வழங்குதல் |
| 10. | P. வையாபுரி,<br>எண்.20/11/708 –B, A 12,<br>V.P.K. நகர், மேட்டூர். | மலேரியா மேற்பார்வையாளர் | 31.05.2000 | சேமநலநிதிக்கான வட்டித் தொகை வழங்குதல் |
| 11. | K. அங்கமுத்து,<br>எண்.53/2.2A, 206 D3,<br>பெரியார் நகர், மேட்டூர். | பண்ணைப் பணியாளர் | 30.06.2001 | சேமநலநிதிக்கான வட்டித் தொகை வழங்குதல் |

| | | | | |
|---|---|---|---|---|
| 12. | மாதன்,<br>பாரதி நகர், சிங்கம்மாள் சாலை,<br>மேட்டூர். | துப்புரவுப் பணியாளர் | 31.12.2005 | சேமநலநிதிக்கான வட்டித் தொகை வழங்குதல் |
| 13. | சின்னபொன்னு,<br>எண்.CHF 42, கூலிலைன்,<br>மேட்டூர். | துப்புரவுப் பணியாளர் | 30.06.2011 | சேமநலநிதிக்கான வட்டித் தொகை வழங்குதல் |
| 14. | துரைசாமி,<br>எண்.42/E பிளாக், கூலி லைன்,<br>மேட்டூர். | துப்புரவுப் பணியாளர் | 30.11.2011 | சேமநலநிதிக்கான வட்டித் தொகை வழங்குதல் |
| 15. | M. பாலன்,<br>எண்.2/4–146, காவேரி கிராஸ்,<br>அண்ணா நகர், மேட்டூர். | பண்ணைப் பணியாளர் | 30.06.2017 | ஓய்வூதியப் பலன்கள் மற்றும் சேமநலநிதிக்கான வட்டித் தொை |

--//ஒப்பம்//--
செயலாளர்
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

உதவி பதிவாளர்.